இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 16-08-2024

# மோசடியில் பங்குகள்

பங்குச் சந்தை மோசடி வெளிச்சத்துக்கு வந்ததன் மூலமாக, மோசடியில் பங்குகளும் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியத்தின் (செபி) தலைவர் மாதபி புச் மீதான குற்றச்சாட்டுகள் அதிர்ச்சிக்குரியதாக இந்திய அரசியலை ஆட்டுவிக்கத் தொடங்கி இருக்கின்றன. பங்குச் சந்தைகளில் அதானி குழுமம் முறைகேடுகளில் ஈடுபட்டு வருவதாக அமெரிக்காவைச் சேர்ந்த ஹிண்டன்பர்க் நிறுவனம் கடந்த ஆண்டு பகிரங்கமாக குற்றம் சாட்டியது. அதற்கு அந்தக் குழுமத்தாலும், அந்தக் குழுமத்தின் பாதுகாவலர்களான பா.ஜ.க. தலைமையாலும் சரியான பதிலைத் தர முடியவில்லை. 'இது குறித்து 'செபி' அமைப்பு விசாரிக்கும்' என்று சொல்லி பிரச்சினையை மூடினார்கள்.

**விசாரணை அமைப்பான 'செபி'யின் முகத்திரையையும் ஹிண்டர்பர்க் அமைப்பு கிழித்து விட்டது.' விசாரணை நடத்திக் கொண்டு இருப்பவரே அதானி குழுமத்தில் முதலீடு செய்துள்ளார் என்கிறது ஹிண்டன்பர்க்.**

"செபி தலைவராக இருக்கும் மாதபி புச்சுக்கும் அதானி குழுமத்துக்கும் நிதித் தொடர்புகள் இருக்கின்றன. 'செபி' தலைவரான மாதபி புச்சும், அவரது கணவர் தவல் புச்சும் அதானி குழுமத்தில் பங்குகளை வைத்துள்ளார்கள். இவை கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் இருக்கின்றன. அப்போது மாதபி புச், 'செபி'யின் முழுநேர உறுப்பினராக ஆகவில்லை. செபி தலைவராக ஆன இரண்டு வாரங்களில் தனது பங்குகளை தனது கணவரிடம் ஒப்படைத்துவிட்டார். இந்த தொடர்புகளால் தான் அதானி குழுமத்தின் மொரிஷியஸ் மற்றும் வெளிநாட்டு போலி நிறுவனங்கள் குறித்த விசாரணையில் செபி ஆர்வம் காட்டவில்லை" என்று ஹிண்டர்பர்க் குற்றம் சாட்டுகிறது. எந்தெந்த நிறுவனத்தில் எவ்வளவு பங்குகள் உள்ளது என்பதை அவர்கள் விரிவாக வெளியிட்டுள்ளார்கள்.

**இதனை சி.பி.ஐ. அல்லது சிறப்பு விசாரணைக் குழு விசாரிக்க வேண்டும் என்று காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. "பல கோடி இந்திய மக்கள் தங்கள் பணத்தை பங்குச் சந்தையில் முதலீடு செய்துள்ளனர். அவர்களின் நம்பிக்கையைக் காப்பாற்றும் வகையில் 'செபி' செயல்பட வேண்டும். அதானி குழுமம் பற்றிய குற்றச்சாட்டு குறித்து இரண்டு மாதங்களில் விசாரணை நடத்தி அறிக்கை தர உச்சநீதிமன்றம் உத்தரவு போட்டது. இதில் பல குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணையை கடந்த ஓராண்டு காலமாக செபி முடிக்கவே இல்லை. மக்களவைத் தேர்தலில் மோடிக்கு எந்த பாதிப்பும் வந்துவிடக் கூடாது என்பதற்காக செபி இப்படி நடந்து கொண்டது. இப்போது செபி தலைவர் மீதே பகிரங்கமாக குற்றச்சாட்டு வந்துவிட்டது. இனிமேல் செபி விசாரணை நடத்தினால் உண்மை வெளிவராது. மாதபி புச், தனது தலைவர் பதவியில் இருந்து விலக வேண்டும்" என்று காங்கிரஸ் கட்சி சார்பில் ஜெயராம் ரமேஷ் குற்றம் சாட்டி இருக்கிறார்.**

வழக்கம் போல இந்த விவகாரத்தில் நேரடியாக பதில் சொல்ல முடியவில்லை. அந்நியச் சதி, பொருளாதாரத்தை சீர்குலைக்கச் சதி என்று கூப்பாடு போடுகிறது. நாடாளுமன்றக் கூட்டுக்குழு விசாரணை வேண்டும் என்ற காங்கிரஸ் கட்சியின் கோரிக்கையை பா.ஜ.க. நிராகரித்துள்ளது. "காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டாளிகள் 'டூல் கிட்' நபர்களை வைத்து இந்தியாவின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கவும், நாட்டின் ஸ்திரத்தன்மையை நிலைகுலையச் செய்யவும் முயற்சித்தனர். அது தோல்வியில் முடிந்தது. இப்போது பங்குச் சந்தையை அவர்கள் குறிவைத்துள்ளனர். பொய்யாகத் தயாரிக்கப்பட்ட அறிக்கையை வைத்து சதி வலையை விரித்துள்ளனர். நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைக்க முயற்சிக்கிறார்கள்." என்று பா.ஜ.க. சார்பில் முன்னாள் அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் கதறி இருக்கிறார்.

**'செபி' தலைவரான மாதபிக்கு, அதானி குழுமத்தில் பங்கு இருந்ததா இல்லையா? இதுதான் கேள்வி. அதற்கு பதில் சொல்லவில்லை ரவிசங்கர் பிரசாத். இப்படிச் சொல்ல பா.ஜ.க.வுக்கு அருகதை இருக்கிறதா?**

2024 நாடாளுமன்றத் தேர்தலில் போலி கருத்துக் கணிப்பின் மூலம் மிகப்பெரிய பங்குச்சந்தை ஊழலை அரங்கேற்றியவர்கள் பங்குச் சந்தை சரிவை பற்றி கவலைப்படுகிறார்கள். நாடாளுமன்றத் தேர்தல் நேரத்தில் பேட்டி அளித்த பிரதமர் மோடி, "ஜூன் 4-ம் தேதி பங்குச் சந்தை புதிய உச்சத்தை எட்டும் என்று என்னால் நம்பிக்கையுடன் சொல்ல முடியும்" என்று உறுதி அளித்தார். மோடியை போலவே உள்துறை அமைச்சர் அமித்ஷாவும், "ஜூன் 4-க்கு முன்பு பங்குகளை வாங்கி விடுங்கள். பங்குச் சந்தை உச்சம் தொடப் போகிறது" என்று சொன்னார். அந்த ஜூன் 4-ம் தேதி அன்றுதான் நாடாளுமன்றத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது.

**இதன்பிறகு போலி கருத்துக்கணிப்புகளை அவிழ்த்துவிடத் தொடங்கினார்கள். பா.ஜ.க. மீண்டும் ஆட்சி அமைக்கும் என்றும், பா.ஜ.க. கூட்டணி 350 இடங்களுக்கு மேல் வெல்லும் என்றும் தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்பு முடிவுகள் வெளியாகின. அடுத்தநாளே இந்திய பங்குச்சந்தை புள்ளிகள் திடீரென புதிய உச்சம் தொட்டது. சென்செக்ஸ் 76,739 புள்ளிகளையும், நிப்டி 23,339 புள்ளிகளையும் எட்டியது. முதலீட்டாளர்களுக்கு ஒரே நாளில் சுமார் 14 லட்சம் கோடி ரூபாய் லாபம் கிடைத்தது. ஆனால் ஜூன் 4ம் தேதி பா.ஜ.க. கூட்டணி 293 இடங்களை மட்டுமே வென்றதால் பங்குச் சந்தையில் கடும் சரிவு ஏற்பட்டது. முதலீட்டாளர்களுக்கு 30 லட்சம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. பாவம் இந்த 30 லட்சம் கோடி ரூபாயை அப்பாவிகளிடம் இருந்து பறித்துக் கொடுத்தவர்கள் யார்?**

கருத்துக் கணிப்பை வைத்து பங்குச் சந்தை மோசடியை அரங்கேற்றியவர்கள் இன்று, அன்னியச் சதி என்று பொங்குகிறார்கள். சொந்த நாட்டு மக்களின் பணத்தை சூறையாடி, சில குறிப்பிட்ட நிறுவனங்களின் கையில் கொடுக்கும் மோசடியின் பங்குதாரர்கள் யார் என்பதை ஹிண்டன்பர்க் சொல்லித் தான் இந்திய நாட்டு மக்களுக்குத் தெரியவேண்டுமா என்ன?




சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் நேற்று (15.8.2024) நடைபெற்ற சுதந்திரத் திருநாள் விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுடன், டாக்டர் ஆ.ப.ஜெ. அப்துல்கலாம் விருது, கல்பனா சாவ்லா விருது, முதலமைச்சரின் நல் ஆளுமை விருதுகள், மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக மிகச் சிறந்த சேவை புரிந்தோருக்கான விருதுகள், மகளிர் நலத்திற்கான சிறந்த சேவைக்காக தொண்டாற்றியவர்களுக்கான விருது, சிறந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான முதலமைச்சர் விருதுகள், முதலமைச்சரின் மாநில இளைஞர் விருதுகள், ஆகிய தமிழ்நாடு அரசின் விருதுகளையும், பதக்கங்களையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் பெற்றவர்கள் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.

## இலக்கியச் செல்வர் – முனைவர்

# குமரி அனந்தனுக்கு 'தகைசால் தமிழர்' விருது!

## சுதந்திர தின விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஆக. 16 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று (15.8.2024) சுதந்திரத் திருநாளையொட்டி, சென்னை தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் நடைபெற்ற தேசியக் கொடியேற்று விழாவில், தமிழ்நாட்டிற்கும், தமிழினத்தின் வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியதற்காக **2024ஆம் ஆண்டுக்கான தகைசால் தமிழர் விருதினை இலக்கியச் செல்வர் முனைவர் குமரி அனந்தன் அவர்களுக்கு வழங்கி சிறப்பித்தார்.**



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், 2021ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டவாறு தமிழ்நாட்டிற்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியவர்களைப் பெருமைப்படுத்திடும் வகையில் ஆண்டுதோறும் 'தகைசால் தமிழர் விருது' வழங்கப்பட்டு வருகிறது. இதுகாறும் இவ்விருது சங்கரய்யா அவர்களுக்கும்,

ஆர். நல்லகண்ணு அவர்களுக்கும், ஆசிரியர் கி.வீரமணி அவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வரிசையில், 2024ஆம் ஆண்டுக்கான 'தகைசால் தமிழர் விருது'க்கு இலக்கியச் செல்வர் முனைவர் குமரி அனந்தன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர், கன்னியாகுமரி மாவட்டம், குமரிமங்கலம் என்ற அகத்தீச்வரத்தில், சுதந்திரப் போராட்டத் தியாகி அரிகிருஷ்ணன் - திருமதி தங்கம்மாள் தம்பதிக்கு முதல் மகனாக 1933 மார்ச்சு 19 ஆம் தேதியன்று பிறந்தவர்.

### எவரோடும் பகைகொள்ளாத பண்பாட்டுச் செம்மல்!

பெருந்தலைவர் காமராசரின் அருமந்த சீடராக விளங்கியவர், காங்கிரசுப் பேரியக்கத்தின் மேனாள் மாநிலத் தலைவராக பொறுப்பு வகித்தவர். மக்கள் நலனுக்காகப் பதினேழு முறை தமிழ்நாடு முழுவதும் நடைபயணம் மேற்கொண்டவர். ஏழை விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வேண்டுமென்று களக்காட்டிலிருந்து இராதாபுரம் வரை நடைபயணம் மேற்கொண்டதன் விளைவாக 15.08.1984 அன்று 1.5 ஏக்கர் நஞ்சை நிலம் மற்றும் 2.5 ஏக்கர் புஞ்சை நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு இலவச மின்சாரத் திட்டம் பெற்றுத் தந்தவர். இலக்கியச் செல்வராகவும், மேடைப் பேச்சாளராகவும் எவரோடும் பகை கொள்ளாத பண்பாட்டுச் செம்மலாகத் திகழ்பவர்.

1977ஆம் ஆண்டு நாகர்கோயில் தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் நாளிலிருந்து தமிழில் பேசுவதற்குப் பல முறை அவையில் போராடி, பத்து முறைக்கு மேல் தொடர்ந்து காவலர்களால் வெளியேற்றப்பட்டு, சோர்ந்துவிடாமல் அவரின் தொடர் முயற்சியால் 20.11.1978இல் தமிழில் பேசுவதற்கு அனுமதி கிடைத்து, நாடாளுமன்றத்தில் தொடர்ந்து தமிழிலேயே பேசியவர். இது குறித்து முத்தமிழறிஞர் கலைஞர், "தனிமரம் தோப்பாகாது" என்ற பழமொழியை மாற்றி அமைத்து விட்டார் என்ற பாராட்டினைப் பெற்றவர்.

### தமிழுக்கு முதலிடம் கோரி போராடுபவர்!

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராக 1980, 1984, 1989 மற்றும் 1991 ஆகிய ஆண்டுகளில் நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர். தமிழகத்தில் பனைவளம் பெருக முழங்கியவர். தமிழ்நாட்டில் ஒன்றிய அரசு அலுவலகப் படிவங்கள் அனைத்திலும் தமிழுக்கு முதலிடம் தரப்படவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி, ஒன்றிய அரசின் அலுவலகங்கள் முன் ஆர்ப்பாட்டம் நடத்தியவர். தமிழ்நாட்டில் தாய்மொழித் தமிழுக்கு எங்கும் முதலிடம் தரப்பட வேண்டும் என்று வலியுறுத்தியவர். தமிழ்நாடு அரசின் மகாகவி பாரதியார் விருது மற்றும் பெருந்தலைவர் காமராசர் விருது பெற்றவர்.

செங்கோட்டையில் வீரவாஞ்சிநாதனுக்கு மணிமண்டபம் அமைக்க கோரிக்கை வைத்தவர். எட்டயபுரம் கூட்டுறவு நூற்பாலைக்கு பாரதியார் பெயரிட உண்ணா நோன்பிருந்து கோரிக்கையில் வெற்றி பெற்றவர்.

பைகிராப்ட்ஸ் ரோடு என்று பெயர் கொண்டிருந்த சாலைக்கு பாரதி சாலை எனப் பெயர்வர முனைந்து வென்றவர். வானொலி என்பதை ஆகாஷ்வாணி என்றாக்க முனைந்த போது எதிர்த்து சென்னையில் பேரணியும் சாத்தூர் வைப்பாற்று மணல் வெளியில் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம்; தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஆகியோரை அழைத்து பெரிய மாநாடு நடத்தி வானொலி தொடர்ந்து நிலைக்க வழி வகுத்தவர்.

நாடாளுமன்ற உறுப்பினராக செயல்பட்ட போது POST CARD; MONEY ORDER FORM என்பனவற்றைத் தமிழில் அஞ்சலட்டை, பணவிடைத்தாள் என்று தமிழில் கொண்டுவர வேண்டும் என்று கோரிக்கை வைத்து நிறைவேற்றி CHEQUE என்பது காசோலை என அழைக்கவும், தந்தியை விரைவு வரைவு என அழைத்துச் செயல்பாட்டிற்கு கொண்டு வந்தவர்.

நல்லாட்சி தந்த நாயகன் காமராஜ், குமரி அனந்தனின் தமிழ் அமுது, சிந்தனைப் பண்ணையில் பாரதியார், சிந்தனைப் பண்ணையில் பாரதிதாசன், பார் அதிரப் பாடிய பாரதி உட்பட 29 நூல்களை எழுதியுள்ளார்.

சென்னையில் உள்ள பெரும்பான்மை கல்லூரிகளிலும் மேல்நிலைப் பள்ளிகளிலும் சென்று சொற்பொழிவாற்றியதோடு, மாணவ, மாணவிகளுக்கும் இக்கலையில் பயிற்சி அளித்ததோடு, மாணவர்களை மேடைகளில் பேச ஆக்கமும், ஊக்கமும் அளித்த சிறப்பிக்குரியவர்.

**சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே அதைத்**
**தொழுது படித்திடடி பாப்பா**

என்ற பாரதியின் வாக்கை செயல்படுத்திக் கொண்டிருப்பவர்.

இத்தகைய சிறப்புகளை தன்னகத்தே கொண்டு தமிழ் மக்கள் மனதில் தனக்கெனத் தனியிடம் பெற்ற, இலக்கியச் செல்வர் முனைவர் குமரி அனந்தன் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுதந்திர தின விழாவில் **'தகைசால் தமிழர் விருது'**க்குரிய பத்து இலட்சம் ரூபாய்க்கான காசோலையும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கி சிறப்பித்தார்.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உடனிருந்தார்.

